<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாடானை</u>

<u>அசல் வழக்கு எண்.95 /2017</u>

PW – திரு. பாரதிதாசன் த பெ, சுப்பிரமணியன் நாள் 06.03.2026

(1969 ம் ஆண்டில் 44 வது பிரிவின்படி) திரு.J.அந்தோணி ரிஷான்தேவ், பி.பி.ஏ., எல்,எல்.,பி. (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற (இளநிலை உதவியாளர்) திருமதி.ராமு என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. வழக்கில் சொல்லியுள்ள வருவாய் கோட்டாச்சியர் உத்தரவிள்பேரில் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களிடம் ப.மு.பி6 26397.2014 என்ற எண்ணில் இந்த பிரதிவாதி மேல்முறையீடு தாக்கல் செய்து 11.07.2016 ல் வருவாய் கோட்டாச்சியரின் உத்தரவு ரத்து செய்யப்பட்டது என்றும் அந்த விவரத்தை தெரிந்துகொண்டே வழக்கில் மறைத்து விட்டேன் என்றால் சரியல்ல அந்த விவரம்ம எனக்கு தெரியாது. 1 ம் பிரதிவாதி வழக்கு சொத்தை ஆக்கிரமிக்கவில்லை என்றும் தனது சொந்த சொத்தில் தான் வசித்து வருகிறார் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் இரண்டாம் பிரதிவாதி வேல்முருகனுக்கு கிரையம் கொடுத்த சொத்திற்கு பதிலாக எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட கிழமேல் 10 அடி தென்வடல் 40 அடி இடத்தை ப ரிமாற்றம்செய்துள்ளார் என்பது தவறு என்றால் சரியல்ல. ஒருகால் கிழமேல் 10 அடி தென்வடல் 40 அடி இடமானது 2 ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றாலும் 2 ம் பிரதிவாதிதான் இந்த வழககை தாக்கல்செய்ய உரிமை பெற்றவர் என்றும் எனது தகப்பானருக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் எனது தகப்பனாருக்கும் எனக்கும் எவவித பரிகாரமும் கிடைக்கதக்கல்ல என்றால் சரியல்ல.

**(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)**

(ஓம்/திரு.J.அந்தோணி ரிஷான்தேவ்)

மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருவாடானை